பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 11 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. இந்தியாவில் பத்து ஆண்டுகளில் நான்கு கோடி குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கும் திட்டம் போன்ற நீடித்த வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் மாநில இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.
3. கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவதால் விலைவாசி கட்டுக்குள் இருப்பதாக மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
4. நடப்பு ஆண்டுக்கான சம்பா நெற்பயிர் காப்பீடு செய்வதற்கான கால அவகாசத்தை வரும் 30-ஆம் தேதி வரை நீட்டித்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.
5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அனுபமா உபாத்தியாயா அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இந்தியாவில் கடந்த பத்து ஆண்டுகளில் நான்கு கோடி குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கும் திட்டம் உள்ளிட்ட நீடித்த வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுக்ப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வில் உரையாற்றிய பிரதமர், கடந்த ஐந்து ஆண்டுகளில் 12 கோடி வீடுகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்கியது, பத்து கோடி குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கியது, 11 கோடியே 50 லட்சம் குடும்பங்களுக்கு கழிவறைகள் கட்டிக் கொடுத்தது உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

இதன் மூலம் நீடித்த வளர்ச்சியை இந்தியா உறுதி செய்திருப்பதாக அவர் கூறினார்.

பாரீஸ் பருவநிலை மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்றிய முதல் நாடு இந்தியா என்றும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு, பேரிடா தடுப்பு கட்டமைப்பில் கூட்டாண்மை, ஒரே சூரியன் – ஒரே உலகம் – ஒரே வழித்தடம் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்தியா முன்னேறி வருவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

ஜி-20 மாநாட்டுக்கு இடையே ஆஸ்திரேலிய பிரதமர் திரு அந்தோணி அல்பனீசை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

பிரரேசில் அதிபர் திரு லூலா டா சில்வா, சிலி அதிபர் திரு **Gabriel boric** -யையும் சந்தித்த திரு நரேந்திரமோடி, இருதரப்பு உறவுகள் மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

தமது பிரேசில் பயணத்தை முடித்துக் கொண்டு திரு நரேந்திரமோடி கயானா புறப்பட்டார்.

1968-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் கயானா செல்வது இதுவே முதல்முறையாகும்.

அந்நாட்டு அதிபர் திரு முகமது இர்பான் அலி-யுடன் பிரதமர் இருதரப்பு பேச்சுக்கள் நடத்துவதுடன், அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் உரையாற்றவுள்ளார்.

இந்தியா – **Caricom** உச்சி மாநாட்டிலும் பிரதமர் பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் வாக்குப்பதிவு காலை ஏழு மணிக்குத் தொடங்கி மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு கேமராகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு எஸ் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் நான்டெட் மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் இன்று நடைபெறுகிறது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் இரண்டாம் கட்டமாக 38 தொகுதிகளில் காலை ஏழு மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை ஐந்து மணி வரை நடைபெறுகிறது.

நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள 31 வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு காரணங்களுக்காக மாலை நான்கு மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஏழாயிரம் வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாகவும், இங்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாக்குப்பதிவை வெப் கேமரா மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு கே ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 23-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

**[]<<<>>>[]**

நடப்பு ஆண்டுக்கான சம்பா நெற்பயிர் காப்பீடு செய்வதற்கான கால அவகாசம் வரும் 30-ஆம் தேதி வரை நீட்டித்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அரசின் பொது சேவை மையங்கள் செயல்படுவதால் விவசாயிகள் இந்த நெற்பயிரை காப்பீடு செய்து பயனடையுமாறு மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழக அரசு மேற்கொண்ட தொடர் முயற்சியால் சம்பா, தாளடி மற்றும் பிசானப் பருவ நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை வரும் 30-ஆம் தேதி வரை நீட்டிப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

நாட்டின் முன்னேற்றத்தில் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சி முக்கியத்துவம் வாய்ந்தது என்று மாநில அமைச்சர் திரு மூர்த்தி தெரிவித்துள்ளார்.

மதுரையில் அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு 11 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாநிலம் முழுவதும் 100 கோடி ரூபாய்கும் கூடுதலாக கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும், அனைவருக்கும் அரசின் திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு மூர்த்தி கூறினார்.

ராமநாதபுரத்தில் நடைபெற்ற கூட்டுறவு வாரவிழாவில் மாநில அமைச்சர் திரு ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது பேசிய அவர், இம்மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு 400 கோடி ரூபாய் கடனுதவி வழங்க திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் நடைபெற்ற கூட்டுறவு வாரவிழாவில் பேசிய அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், ஏழை மக்களுக்கு உதவும் துறையாக கூட்டுறவுத்துறை விளங்குகிறது என்று கூறினார்.

கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவதால் விலைவாசி கட்டுக்குள் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தஞ்சாவூரில் நடைபெற்ற கூட்டுறவு வாரவிழாவில் மாநில அமைச்சர் திரு கோ வி செழியன் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் ஏழாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - கோவி செழியன் )---40 செகண்ட்*

**[]<<<>>>[]**

இந்த ஆண்டு நாகூர் தர்கா பெரியாண்டவர் சந்தனக்கூடு திருவிழாவுக்கு 45 கிலோ சந்தனக் கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையை தர்கா நிர்வாகிகளிடம் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வழங்கினார்.

ஆண்டுதோறும் இந்த திருவிழாவுக்கான சந்தனக் கட்டைகளை தமிழக அரசின் வனத்துறையிலிருந்து கட்டணமின்றி வழங்கப்பட்டு வருவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நேற்று இரவு முதல் விட்டு விட்டு கனமழை பெய்து வருகிறது.

கனமழை காரணமாக நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

அமெரிக்காவின் வர்த்தகத்துறை செயலாளராக திரு **Howard lutnick** -யை அந்நாட்டு அதிபராக

**[]<<<>>>[]**

தலைநகர் தில்லியில் இன்றும் காற்றின் தரம் மிகமோசமான நிலையில் உள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஆஸ்திரேலியாவின் மெல்போான் நகரில் சர்வதேச ஜவுளி கண்காட்சியில் தமிழ்நாடு சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கினை மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு காந்தி நேற்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

அரசின் செயல்பாட்டில் மின்னணு முறையிலான நிர்வாகத்தை ஊக்குவிப்பதற்காக மாநில திட்டக்குழுவின் சார்பில் ப்ளாக் செயின் தொழில்நுட்ப பயிலரங்கை அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் சென்னையில் தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவிலில் வருடாந்திர பராமரிப்பு பணி நிறைவடைந்ததை அடுத்து ரோப்கார் சேவை இன்று முதல் செயல்படும் என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஈரோடு மாவட்டம் கோட்டுபுள்ளம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மர்ம விலங்கு நடமாட்டம் இருப்பதால் பொதுமக்கள் தங்கள் கால்நடைகளை பாதுகாத்து வைக்குமாறு ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கப்பட்டது.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி கல்லூரி விடுதிகளில் அதிகாரிகள் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

[]<<<>>>[]

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அனுபமா உபாத்தியாயா வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் அவர் அமெரிக்காவின் **Beiwen zhang** -ஐ 21-17, 8-21, 22-20 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சுமித்ரெட்டி – சிக்கிரெட்டி இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற புனே – உத்திரபிரதேசம் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

மற்றொரு போட்டியில் பாட்னா அணி, பெங்களூரு அணியை வென்றது.

***End of News***